# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
# ஆண்டறிக்கை 2009-2010

# பகுதி-1

## செயல்களும் கடமைகளும்:

தேர்வாணையம் ஆற்ற வேண்டிய பணிகள் என்ன என்பதன் விவரங்கள் இந்திய அரசியல் அமைப்புப் பிரிவு 320-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

மாநிலப் பணிகளில் பணி நியமனம் பெற உரிய தேர்வுகளை தேர்வாணையம் நடத்த வேண்டும். மேலும் மாநில அரசு, தன் பணியாளர்களை எந்த முறையில் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும், பணி விதிகள் உருவாக்குதல் மற்றும் மாற்றம் செய்தல், ஒரு பதவிக்கு பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் நியமனம் செய்வதில் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், பணியாளர்களுக்கு பணிக்காலத்தில் ஏற்படும் செலவினம் மற்றும் தீங்குகளுக்கான இழப்பீடு வழங்குவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய பொருள்கள் குறித்தும் தேர்வாணையத்தினைக் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும். அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்துகின்றது. இந்திய அரசுப் பாதுகாப்புத்துறை சார்பாக டேராடுனில் உள்ள இந்திய பாதுகாப்புக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் மாணவர்களை சேர்ப்பதற்கான தேர்வையும் தேர்வாணையம் நடத்துகின்றது.

## வேலைப் பளு :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் செய்து முடித்த தேர்வுப்பணி விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

I. நேரடி தெரிவுகள்

1. முதல் நிலைத் தேர்வு

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 1 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 82 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | : | 86,244 |

2. முதன்மை எழுத்துத் தேர்வு :-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 21 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 5,514 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | : | 1,98,477 |

3. நேர்முக தேர்வு :-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | : | 25 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 3,995 |
| தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் | : | 7,413 |

4. இறுதியாக தெரிவு செய்யப்பட்டவர்கள் :-

| | | |
|---|---|---|
| இறுதி முடிவு செய்யப்பட்ட தெரிவுகளின் எண்ணிக்கை | : | 32 |
| காலியிடங்களின் எண்ணிக்கை | : | 16,775 |
| இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | : | 16,206 |

## II. இதர தேர்வு விவரங்கள்

1. துறைத் தேர்வு - 2009

| | |
|---|---|
| விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | : 1,42,350 |
| தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை | :1,05,643 |
| வெற்றி பெற்றவர்களின் எண்ணிக்கை | : 57,027 |

2. அரையாண்டுத் தேர்வு

2009 ஆம் ஆண்டு செப்டம்பர் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை: 16

2010 ஆம் ஆண்டு மார்ச் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை : 98

3. கல்வி தகுதி/வயது முதலியவற்றில் விதி தளர்த்தியது : 47
4. பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலம் தெரிவு செய்தல் : 932 நபர்கள்.
5. ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதல் அளித்தல்
   - அமைச்சுப் பணியில்; : 34 நபர்கள்.
6. ஒழுங்கு நடவடிக்கை -அரசுக்குத்தேர்வாணையம்
   தன் கருத்துகளைத் தெரிவித்த வழக்குகள் : 310 நேர்வுகள்.
7. ஒழுங்கு முறை விதி 16(பி) பிற்பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட
   இசைவு அளிக்கப்பட்டவை : 611 நேர்வுகள்
8. வரவு மற்றும் செலவு (ரூபாய் ஆயிரங்களில்)

| | | |
|---|---|---|
| வரவு | ..... | 4,90,36 |
| செலவு | ..... | 26,16,91 |

9. அறிவிக்கைகள் :

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநிலத்தில் பல்வேறு பணிகளில் 69 பதவிகளுக்கான காலியிடங்களுக்கு விண்ணப்பங்களை கோரி 24 அறிவிக்கை விளம்பரங்களை வெளியிட்டது. அப்பதவிகளின் காலியிடங்களின் எண்ணிக்கை 6,238, விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை 6,53,892 ஆகும்.

# பகுதி-2

## நேரடித் தெரிவுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் 32 தெரிவுகளுக்கு இறுதி முடிவினை அறிவித்தது. 16,775 காலியிடங்களுக்கு இறுதியாக 16,206 விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்தது.

### முதல் நிலைத் தேர்வு

அறிக்கைக்குரிய ஆண்டில் தொகுதி-I பணிக்கு முதல்நிலைத் தேர்வு நடத்தப்பட்டது, 82 காலியிடங்களுக்கு 86,244 விண்ணப்பதாரர்கள் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

### முதன்மை எழுத்துத் தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வகைப் பணிகளில் 5514 காலியிடங்களை நிரப்புவதற்கு 21 முதன்மை எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளுக்கு 1,98,477 விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட்டனர்.

### வாய்மொழி தேர்வுகள்

அறிக்கைக்குரிய ஆண்டில் பல்வேறு பதவிகளில் 3,995 காலியிடங்களை நிரப்ப 25 பதவிகளுக்கு வாய்மொழி தேர்வுகள் நடத்தப்பட்டன. மொத்தம் 72 வேலை நாட்களில் தேர்வாணையம் நேர்முகத் தேர்வுகளை நடத்தியது. நேர்முகத் தேர்வுகள் முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக அழைக்கப்பட்டு நடந்தன. சில நாட்களில் அதிகபட்சமான 7 குழுமங்கள் முற்பகலும் பிற்பகலும் இயங்கின. மொத்தம் 950 நேர்முக அமர்வுகள் நடத்தப்பட்டன. 7,413 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

# பகுதி-3

## தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாத பதவிகள் :

அறிக்கைக்குறிய ஆண்டில் 246 காலியிடங்களுக்கு தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் நிரப்பப்படவில்லை. அவை பின்வறுமாறு:- சுகாதார அலுவலர்-2, கணக்கு அலுவலர் நிலை-III-18, கால்நடை உதவி மருத்துவர் மற்றும் இளநிலை கால்நடை உதவி மருத்துவர்-18. ஒருங்கினைந்தபொறியியல் பணிகள்-1. உதவிமின் ஆய்வாளர்-2, தொகுதி IV பணிகள் (சிறப்புப் போட்டித் தேர்வு)-205.

# பகுதி -4

**பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல், ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள், தற்காலிக நியமனங்கள் முதலியன:**

1. பணிமாற்றம் மற்றும் பதவி உயர்வின் மூலமாக தெரிவு செய்தல் :

   அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையம் மாநில பணிகளில் தொடர்புடைய சார் நிலைப் பணிகளிலிருந்து பணிமாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளுக்கிடையே பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை ஆய்வு செய்தது. அவ்வகையில் 19 பணிகளில் 932 தகுதியும் பொருத்தமும் உடைய நபர்களைத் தெரிவு செய்தது.

2. ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள், முறையீடுகள், மனுக்கள் முதலியன:

| | | |
|---|---|---|
| அ I. | செயல்நடவடிக்கை மேற்கொண்ட வழக்குகள் (31.3.2009 வரை நிலுவையில் உள்ள 2 வழக்குகள் உட்பட) | 822 |
| II. (i) | தேர்வாணையம் கருத்துத் தெரிவித்த வழக்குகள் | 367 |
| (ii) | தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள வழக்குகள் | 173 |
| (iii) | உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பியது. | 8 |
| (iv) | சில ஆவணங்கள் அல்லது விவரங்கள் அரசிடம் கேட்கப்பட்ட வழக்குகள் | 274 |
| III. | வழங்கப்பட்ட தண்டனையில் மாற்றம் செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்ட வழக்குகள் | 24 |
| ஆ I) | அரசுக்குத் தேர்வாணையத்தின் கருத்துத் தெரிவிக்கப்பட்ட வழக்குகள் | 310 |
| II) | அவற்றில் அரசு நடவடிக்கை எடுத்து ஆணைப்பிறப்பித்த வழக்குகள் | 125 |
| III) | அரசு நடவடிக்கை எடுக்க நிலுவையில் உள்ள வழக்குகள் | 185 |

3. சட்டமுறை, ஒழுங்குமுறை விதிகள் முதலியன :

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954-ல் ஒழுங்குமுறை விதி 16(பி) பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு கேட்கப்பட்ட 611 நிகழ்வுகளில் மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளில் நியமனம் செய்ய இசைவு அளிக்கப்பட்டது. எந்த நிகழ்விலும் தேர்வாணையம் தன் இசைவினை அளிக்க மறுக்கவில்லை.

| வரிசை எண்<br><br>(1) | பணி வகை<br><br>(2) | இசைவு அளிக்கப்பட்டவை<br><br>(3) | இசைவு மறுக்கப்பட்டவை<br><br>(4) |
|---|---|---|---|
| 1. | மாநிலப் பணி | 12 | - |
| 2. | சார்நிலைப் பணி | 10 | - |
| 3. | அமைச்சுப்பணி | 589 | - |
| | கூடுதல் | 611 | - |

4. தற்காலிக நியமனங்கள்:

கீழே குறிப்பிட்டவாறு நடப்புக்குறிய ஆண்டில் தற்காலிக நியமனம் செய்ய தேர்வாணையம் இசைவு அளித்துள்ளது.

| | இசைவு அளிக்கப்பட்டது | | இசைவு மறுக்கப்பட்டது | |
|---|---|---|---|---|
| காலம்<br><br>(1) | மாநிலப் பணிகள்<br><br>(2) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள்<br>(3) | மாநிலப் பணிகள்<br><br>(4) | சார்நிலை/ அமைச்சுப் பணிகள்<br>(5) |
| 3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள் | - | 3 | - | - |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள் | - | - | - | - |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள் | - | 1 | - | - |
| 24 மாதங்களுக்கு மேல் | - | - | - | - |
| கூடுதல் | - | 4 | - | - |

5. விதி 20 (எ) (3)-ன் படி இசைவு அளிக்கப்பட்டவை:

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதி 20 (எ) (3)-ன் படி அமைச்சுப் பணியில் மாநிலத்தில் ஒரு துறையிலிருந்து மற்றொரு துறைக்கு நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையத்தால் இசைவு அளிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை 34 ஆகும். எந்த நேர்விலும் இசைவு மறுக்கப்படவில்லை.

6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:

அரசால் 51 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 49 நேர்வுகளில் தேர்வாணையம் கலந்தறியப்பட்டது. 2 நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. அவை தேர்வாணைய உள்ளீட்டு எல்லைக்கு உட்படாதவையாகவோ அல்லது இந்திய அரசியல் அமைப்பு சட்ட பிரிவுக்கூறு 320(3) இன்படி தேர்வாணையத்தைக் கலந்தறியத் தேவையில்லாதவையாகவோ அமைந்துள்ளன.

7. விதி தளர்த்துதல்:

அறிக்கைக்குரிய ஆண்டில் 47 நேர்வுகளில் வயது அல்லது கல்வி தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன.

# பகுதி -5

## தெரிவு தேர்வுகள் தவிர இதர தேர்வுகள்

### 1) துறைத்தேர்வுகள்

2009-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன. 302 தாட்களில் தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 1,42,350 நபர்கள் விண்ணப்பித்தனர்.

| வ.எண். | விவரம் | மே - 2009 | டிசம்பர்-2009 |
|---|---|---|---|
| 1. | மொத்த பாடங்கள் | 132 | 124 |
| 2. | தேர்வு தாட்களின் எண்ணிக்கை | 155 | 147 |
| 3. | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | 70629 | 71721 |
| 4. | தேர்வில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை | 48506 | • 57137 |
| 5. | தேர்ச்சிப் பெற்றவர்களின் எண்ணிக்கை | 25245 | 31782 |
| 6 | தேர்ச்சி சதவீதம் | 52 | 56 |

### 2) அரையாண்டு தேர்வுகள்

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநிலப் பணி அலுவலர்களுக்கு அரையாண்டுத் தேர்வு மற்றும் முதல்நிலைத் தமிழ் மொழி தேர்வு செப்டம்பர் 2009 மற்றும் மார்ச் 2010-ல் நடத்தப்பட்டன. இவற்றில் முறையே 16 மற்றும் 98 அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

3) டேராடுன் இந்திய பாதுகாப்புக்கல்லூரி பள்ளியில் சேருவதற்கான தேர்வை இத்தேர்வாணையம் இந்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகத்திற்காக ஆகஸ்டு 2009 மற்றும் பிப்ரவரி 2010-ல் நடத்தியது. அதில் 78 மற்றும் 172 மாணவர்கள் முறையே கலந்துகொண்டனர்.